Registered as a News Paper in Ceylon

P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

[illegible] (1889) [illegible] 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது — தனிப்பிரதி: சதம் 10

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-சுஙு] யாழ்ப்பாணம்:- ஏவிளம்பி ஹூ மார்கழி மீ கூ உ வெள்ளிக்கிழமை (27 DEC 1957) [இல-ந௬ு]

அரசியல் அலை

## இவ்வாண்டில் அரசாங்கம் எடுத்த பெயரும் புகழும்!

## படுகொலைப் புள்ளி விபரம் படி பல ஏறியது!!

## வேலை நிறுத்த மனப்பான்மை விருத்தியடைந்தது!!!

1957-ம் ஆண்டில் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் எடுத்த பெயரும் அடைந்த புகழும் ஈடில்லாதன என்றே கூறுதல் வேண்டும். இது வரையில் இந்த ஆண்டிலே 525 கொலைகள் நடைபெற்றன என்ற மங்காப் புகழைப் பெற்ற ம. ஐ. முன்னணி உண்மையில் மக்களைப் பாதுகாக்கின்றதென்பதற்குச் சந்தேகம் இருக்குமா?

தூக்குத் தண்டனையை நீக்கிவிட ம. ஐ. மு. அரசாங்கம் செய்த முயற்சிகள் எத்தன்மையன என்பது உலகறிந்ததே. இத்தீவிற் பன்முறை குற்றப்பட்டவர்கள் (I. R. C.) என்ற வகுப்பினர் மனம்போனவாறு வாழ்வதற்கு இடங்கொடுத்த இச்செயலின் விளைவே கொலைகளை எண்ணிறந்தனவாக இருப்பதற்குக் காரணம் என்னலாம்.

வேலை நிறுத்தம் விளையாட்டாய் வேடிக்கையாய் விபரீதமாய் இப்பொழுது வினையாய் விளைந்துவிட்டது. கொழும்புத் துறைமுகத்தின் கோலமும் விவசாயிகளின் வில்லங்கமும் நாட்டின் பொருளாதார நட்டமும் பொது சனத்தின் பொறுக்க முடியாத அல்லல்களும் என்ற பலவற்றை இந்த ஆண்டில் மக்கள் அநுபவிக்க ம. ஐ. மு. அரசாங்கம் ஆட்சிநடத்தியிருக்கின்றது.

போக்குவரத்துத்தேசியமயமாக்கப்படுவதற்குரிய பொழுதிலே பயணஞ்செய்வோருக்குப் பல வசதியீனங்களையுமுண்டாக்கும் வகையில் விசை வண்டிப் போக்குவரத்து நிறுத்தமும் இந்த ஆண்டின் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

## திருக்கேதீச்சரத்தில் சிறந்த திருவெம்பாவை ஒழுங்கு

திருக்கேதீச்சரம் திருப்பணிச் சபையார் திருக்கேதீச்சரம் திருக்கோயிலிற் சிறந்த திருவெம்பாவை ஒழுங்குகள் செய்திருக்கின்றனர். திருவிழாக்களைச் செய்யும் அடியார்களின் திட்டமொன்று வகுக்கப் பெற்றுள்ளது. திருவெம்பாவைக் காலம் பத்து நாட்களிலும் அதிகாலையில் அடியார் கூட்டமொன்று சைவக் கிராமங்கள் தோறும் சென்று திருவெம்பாவைப் பாடல்களைப் படித்து வரும். காலையிற் பூசை நடக்கும்.

வெள்ளிக்கிழமை 27-12-57 தொடக்கம் நாள்தோறும் திருவாதவூரடிகள் புராணம் படித்து பேரறிஞர்களாற் பொருள் சொல்லப்பெறும். சைவப் புலவர் திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை, திரு. மு. ஞானப்பிரகாசம் B. A., B. Sc. (ஏழாலை) பண்டிதர் வி. சங்கரப்பிள்ளை முதலியோர் பொருள் சொல்லுவதிற் பங்குபற்றுவார்கள். சமய வகுப்புகளுடன் தேவார பாராயணமும் நடைபெறும்.

திருவெம்பாவைப் பத்து நாட்களிலும் திருப்பணிச் சபைத் தலைவர் சேர். கந்தையா வைத்தியநாதன் திருக்கேதீச்சரத்திலேயே வசித்து அங்கு வரும் அடியார்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து வைப்பார்கள்.

---

சைவப்பெரியார்

## சிவபாதசுந்தரனார்

### நினைவு நிதி அமைப்பு

காரைநகர் வார்தாக் கல்லூரிக் குருகுல மண்டபத்தில் வடபெரும்பாக வித்தியாதிகாரி திரு. எஸ். யு. சோமசேகரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில்காலஞ்சென்ற சைவப் பெரியார் திரு. சிவபாதசுந்தரனார் அவர்களின் நினைவாக மாணவர் சகாயநிதிச்சபையொன்று நிறுவப் பெற்றது.

"நாவலர் பெருமானின் காலத்திற்குப் பின் சைவத்தொண்டில் ஈடுபட்ட ஒரு பெரியார் திரு. சிவபாதசுந்தரம் அவர்களாவர். தமது வாழ்க்கை மூலம் யாவருக்கும் சைவச்சமய வாழ்வு எது என்பதை அவர் உணர்த்தினர். சைவத்திற்கு அவர்கள் ஆற்றிய தொண்டுகள் அளவிடமுடியா. எனவே அவர்கள் பெயரால் சைவ மரபில் எமது வருங்காலச் சந்ததிகளைப் பயிற்றுவித்து அகில உலகிலும் சைவம் பரவுதற்கு வழி வகுக்கும் நோக்கமாக இச்சகாய நிதி ஏற்படுத்துவது மிகவும் பொருத்தமாகும். இதற்குக் குருகுல முறையில் நடைபெறும் வார்தாக் கல்லூரிக் கல்வி முறையே சாலச் சிறந்ததாகும். எனவே இக்கல்லூரியில் தகுதி வாய்ந்த மாணவர்களுக்கு ஆறு ஆண்டுப் பயிற்சி அளிப்பது அல்லது, இத்தகைய கல்விக்கேற்ற மாணவர் சகாயநிதித் திட்டத்தை ஆதரிப்பது சைவ மரபினர் ஒவ்வொருவரினதும் இன்றியமையாத கடமையாகும் என்று திரு. சோமசேகரம் அவர்கள் தமது தலைமையுரையிற் கூறினர்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் திரு. பொ. நவரத்தினம் எம். ஏ. அவர்கள் பேசும்போது "இந்நண்பகலில் இங்கு வந்து குழுமியிருக்கும் தன்மை நீங்கள் திருநெறிச் செல்வர், உயர்திரு. சு. சிவபாதசுந்தரம் அவர்களிடம் கொண்ட ஆர்வத்தையும் அன்பையும் காட்டுகின்றது.

இன்றைய நிலைமையில் மறச்செல்கள் தலையெடுக்காது தடுப்பதற்கு நல்லறிவு நிரம்பிய வீரர்கள் தேவை. இதற்காகப் பல பாகங்களிலுமுள்ள மாணவர்களைத் தெரிந்தெடுத்துப் போதனையுஞ் சாதனையும் ஒருங்கே ஒரு குருகுலத்திற் பயிற்றி வந்தால் அவர்கள் நாட்டின் வழிகாட்டிகளாகி மக்களுக்குத் தங்கள் தியாக வாழ்வினால் இன்பத்தையும்செழிப்பையும் தருவர் என்று சகாயநிதியின் அவசியத்தை வலியுறுத்தினர். திரு. அ. சிவகுருநாதன் அவர்கள் பிரேரிக்க ஆசிரியர் திரு. ரி. பொன்னம்பலம் அவர்கள் அனுவதிக்க நிதி அமைப்புப் பிரேரணை ஏகமனதாய் ஏற்கப்பட்டது.

"சிவபாதசுந்தரனார் ஞாபக மாணவர் சகாயநிதி வார்தாக் கல்லூரிக் குருகுலத்தில் சைவசித்தாந்தத்தை முறையாகச் சிரேஷ்ட வகுப்பு வரைக்கும் ஆறு ஆண்டுகள் படிப்பதற்கு மாணவர்களுக்கு உதவியளிப்பதற்கேயாகும்" என்ற பிரேரணை சிவதொண்டன் நிலையப் போஷகர்களுள் ஒருவரான திரு. அ. தில்லையம்பலம் அவர்களால் பிரேரிக்கப்பட்டு திரு. க. நடராசா அவர்களால் அனுவதிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

---

## ஆலயநிர்வாகமும் திருத்தலவாசமும்

### அருள் விளங்கும் முறையில் அமையவேண்டிய தேவை

நம் தமிழகத்தில் நடுநாயகமாய் விளங்கும் தலம் சிதம்பரமாகும். இச்சிதம்பர தலத்தைத் தரிசிக்காத சைவர்கள் மிகச் சிலரே. இது பண்டைக்கால இருடிகள் வாழ்ந்த இடம். பேரறிவாளர்கள் வாழ்ந்ததலம். ஆகவே இத்தலத்தில் வாழ்வோர், திருக்கோயில் நிர்வாகப்பொறுப்புடையோர், பற்றற்ற சிவனடியார்களாக இருத்தல் வேண்டும். ஆகவே பக்தர்கள் ஆலய வழிபாடு செய்யும்பொழுது ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கப் பெருமானையும் அங்கு வாழும் சிவனடியார்களையும் சிவம் எனக் கண்டு வழிபடல் வேண்டும். இதனைச் சிவஞானபோதம் 12ம் சூத்திரம்,

"செம்மலர் நோன்தாள்
சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ
அன்பரொடு மரீஇ
மால்அற நேயமும்
மலிந்தவர் வேடமும்
ஆலயம்தானும் அரன்
எனத் தொழுமே"

என வலியுறுத்துகின்றது.

ஆகவே சிவ தலத்தில் வாழ்வோர் உண்மைச் சிவனடியார்களாக வாழவேண்டும். இவர்கள் வாழ்வின் சிறப்பைக் கண்டே ஏனைய மக்களும் திருந்திநன்னெறியில் வாழ்வார்கள். மடங்களில் இருந்து சீவிப்பவர்களும் சிவதொண்டு செய்து வாழவேண்டும். ஞானநூல்களைக் கேட்டல் சிந்தித்தல் முதலானவையுடையராயும் இருத்தல் வேண்டும். இன்று பல மடங்கள் சோற்றுச்சாலைகள் போலவும் வீடு வாசல்கள்போலவும் காட்சியளிக்கின்றன. ஆண்டவன் அருளைப்பெற விரும்புவோர் மக்களாக வாழ்ந்து பெருமக்களின் வாழ்வைச் சிந்தித்து தர்ம வழியில் நடத்தல் வேண்டும். இங்ஙனம் நடந்துவருவரேல் ஆலயங்கள் எல்லாம் திருவருள் பொலிந்து விளங்கும். நால்வர் பெருமக்கள் காலத்தில் சிவதலங்களின் மூர்த்திகளெல்லாம் சுயம்பிரகாசமாய் விளங்கின. எக்கருமத்தைச் செய்யும்பொழுதும் மனிதன் "நான்" "நான்" என்றே செய்கின்றான். இந்த நான் என்பது என்றைக்கு அற்றுப் போகின்றதோ அன்றே அவனுக்குத் திருவடிப் பேறு உரியதாகும். "யான் எனதென்றற்ற இடமே மோனமாம்" என்றார் பெரியார்.

தலவாசம் செய்பவனுக்குச் சிவசாயுச்சிய பதம் கிடைக்கும். மணிவாசகப் பெருமான் தில்லையில் பன்னசாலை அமைத்திருந்து அல்லும் பகலும் ஆனந்தக் கூத்தரை அகம் மகிழ்

தொடர்ச்சி ரு-ம் பக்கம்

— செ. கோ. —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனப்

ஏவிளம்பி ஹூ மார்கழி மீ கஉ வெள்ளிக்கிழமை

## பரிதாபமான பயங்கரமான நிலைமை

வானம் பொய்த்துவிட்டதோ என்று மக்கள் மனம் கலங்கி வாடி வதங்கத் தக்கதாக வரட்சி நீடித்து நின்றது. அந்த நிலைமை மாறி மாரி மழை பெய்யத் தொடங்கியதும் மக்கள் சற்று ஆறுதல் அடைந்தார்கள். ஆனால் விதி விடவில்லை. பருவ மழைவீறுகொண்டுவிடாது தொடர்ந்து பொழிந்த வண்ணமாயிருக்கின்றது. ஆறுகள் எல்லாம் ஆவேசங்கொண்டு பாய்கின்ற தன்மையிற் பெருக்கெடுக்கின்றன. ஆண்டுகளாக வற்றிய நிலையில் இருந்த குளங்கள் யாவும் வரம்பு கடந்து பரந்து வழிகின்றன. இவ்வளவுக்கு இயற்கை அன்னையின் சீற்றம் பொங்கியெழுந்திருக்கின்றது. அவ்வளவில் நின்றுவிட்டாலும் ஏற்பட்ட அல்லலை மக்கள் சகிக்கக்கூடும். 'ஆவீன மழை பொழிய இல்லம் வீழ' என்றபடி பல்லாயிரக்கணக்கான மக்கள் மட்டக்களப்பு கல்முனை கல்லோயா மின்னேரியா பரந்தன் கிளிநொச்சி பொல்லநறுவை முதலிய இடங்களில் வீடிழந்து ஆடு மாடிழந்து பொருளிழந்து பலர் உயிருமிழந்து தவிக்கின்ற பயங்கர நிலைமை உண்டாகி விட்டது. அந்தோ பரிதாபம். பெருக்கெடுக்கும் பேரியாற்றை யார் தடுக்க வல்லார்? வரம்புக் கட்டுக்கடங்காக் குளத்து நீர் கொந்தளித்துப் புரண்டோடினாற் பாதுகாப்புமுண்டா? இறைவன் திருவருள்மழை பொழிந்தாலேயன்றி இந்தப் பேராபத்தினின்றும் மக்கள் விலக முடியாது.

ஆனால் மக்களின் இடரைக் களைவதற்கு ஆட்சியாளர்கள் என்ன செய்கின்றார்கள். மாகாண அதிபர்களும் காரியாதிகாரிகளும் தங்களாலானமட்டும் உதவி அளிக்கின்றார்களெனினும் பணம் கொடுக்கும் மந்திரி சபையாரும் மந்திரிமார்களும் நிலைமையை யுற்றுணர்ந்து தக்கவாறு வசதியளிக்கின்றார்களாஎன்பது சந்தேகமே. வேலை நிறுத்தங்களாலே கொழும்புத் துறைமுகத்தில் உணவுப் பொருட்கள் இறக்குவாரில்லாமற் றடைப்பட்டிருப்பதைநோக்குமிடத்து உணவுப் பஞ்சமும் அடுத்தபடியாகத் தோற்றும் என்றே அஞ்சவேண்டியிருக்கின்றது. ஆடம்பரச் செலவுகளிலும் அனாவசியமான விரயங்களிலும் பணத்தை வீசுகின்ற ஆட்சியாளர்கள் இப்பொழுதுதாவது உல்லாச வாழ்க்கையின் மடமையை உணருவார்களா? ஊணின்றி உடையின்றி உறங்குவதற்கிடமின்றி வாடிப் பரிதபிக்கும் மக்களுக்குப் போதிய உதவி புரியாவிட்டாற் பெரும்பழி வந்துசேரும்.

ஆட்சியாளர்களின் பொறுப்பு மட்டுமன்றி மக்களின் கடமையுமொன்றிருக்கின்றது. நிதி படைத்தவர்கள் பொருள் உள்ளவர்கள் உற்றார் அயலவர் உள்ளம் உடைந்து கலங்கி நிற்கும் நேரத்தில் கொடுத்துதவுதல் வேண்டும். களியாட்டங்களிலும் பொழுதுபோக்குகளிலும் [illegible] விரயஞ் செய்வது [illegible] தருமமாகாது.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 29—12—57 —— 4—1—58. ]

**மேடராசி அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.**

உம்முடைய சொந்தக் கருமங்கள் இந்த வாரம் திருந்தும். தனலாபங்களும் நிச்சயம். ஆனால் மனச்சமாதானமிருக்கமாட்டாது. சிறு அபாயங்களுக்கும் நண்பர்களுடன் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு.

**இடபராசி கார்த்திகை 2, 3 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.**

குடும்பக் குழப்பங்களுக்கு இந்த வாரம் இடமுண்டு. நீர் அதிக இடைஞ்சல்களை நீங்க வேண்டி வரும். சுகவீனங்களுக்கும் மனச்சலனங்களுக்கும் இடமுண்டு. பிதாவழி இனத்தவர் உதவியாயிருப்பர்.

**மிதுனராசி மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3, 1ம் பாதம்.**

ஒரு நல்ல வாரம். உம்முடைய பகைவரை நீர் வெல்லக்கூடியதாயிருக்கும். தனலாபங்களும் வழக்கில் வெற்றியும் நிச்சயம். சமுகத்துறையிலும் இது ஒரு நல்ல வாரமாயிருக்கும்.

**கடகராசி புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.**

இனத்தவர்கள் மூலம் இந்த வாரம் இடைவிடாத தொந்தரவுகள் உண்டாகும். தேகசுகம் சிறிதும் நல்லாயிருக்கமாட்டாது. வயிற்றுக் கோளாறுகளுக்கு இடமுண்டு. பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்ல வாரம். போட்டியிடுவோரை வெல்லுதலும் நிச்சயம்.

**சிங்காசி மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்.**

மாதாவழி இனத்தவர் இந்த வாரம் உம்மை இடைஞ்சல்களுக்குள்ளாக்கக்கூடும். முதல் இரு நாட்களிலும் உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது. அவமானங்களுக்கும் பிழை எண்ணங்களுக்கும் இடமுண்டு. இரகசியப் பகைவரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்.

**கன்னிராசி உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.**

முதல் இருநாட்களும் புதுக்கருமங்களுக்குநல்லாயிருக்கும், செவ்வாய் புதனும் வியாழன் காலையும் கவனமாய்க் கழிக்க வேண்டும். வார மிகுதி நல்லாயிருக்கும், உம்முடைய சொந்தக் கருமங்களில் அதிக திருத்தங்களைக் காண்பீர்.

**துலாம், சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.**

முன் அரைவாரம் புதுக்கருமங்களுக்கு நல்லாயிருக்கும். தனலாபங்களும் மேலதிகாரிகளிடமிருந்து உதவிகளும் நிச்சயம், வியாழன் வெள்ளி சனி தொந்தரவானவையாயிருக்கும்.

**விருட்சிகராசி விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.**

உம்முடைய எல்லாக் கருமங்களிலும் இந்த வாரம் பல இடைஞ்சல்களுண்டாகும். தேகசுகமும் நல்லாயிருக்கமாட்டாது, நண்பரும் சகோதர சகோதரிகளும் உதவியாயிருப்பர்.

**தனுராசி மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,**

பணத்துறைக்கும் சொந்தக்கருமங்களுக்கும் நல்ல வாரம். தேகசுகம் தொடர்ந்து நல்லாயிராமலிருக்கின்றது. இனத்தவர்களும் இந்த வாரம் உம்மைச் சிறிது வருத்துவர்.

**மகாராசி உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,**

ஒரு நல்ல வாரம். வேலை கூடுதலாயிருக்கும். ஆனால் போதுமான அளவுக்குப் பதிலுபகாரம் பெறுவீர். நண்பர் அதிக உதவியாயிருப்பா. பகைவர் அழிவும் மனச்சமாதானமும் நிச்சயம்.

**கும்பராசி அவிட்டம் 3, 4ம் பாதம். சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,**

ஒரு நல்ல வாரம், உம்முடைய முயற்சிகளை நீர் இலகுவாக ஒழுங்குபண்ணக்கூடியதா யிருக்கும். எதிர்ப்பு நீங்கிவிடும், சமுகசத்தியும் புகழும் நிச்சயம்.

**மீனராசி பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி**

ஒரு தளப்பமான வாரம். உம்முடைய இனத்தவர்கள் அதிக கோபம் மூட்டுவர். பணத்துறையில் ஒரு அளவுக்கு நல்ல வாரம். வார இறுதியில் குழப்பஞ்செய்வோரைப்பற்றி எச்சரிக்கையாயிருக்கவும்,

ஆங்கில, தமிழ், இந்துசாதன சந்தாதாரர்களுக்கு

**ஒரு அரிய சந்தர்ப்பம்**

இந்த வாரபலன் கணிக்கும் ஸ்ரீ ராதாகிருஷ்ணன் அவர்கள் எங்கள் சந்தாதாரர்களுக்கு மட்டும் குறைத்த விகிதமான ரூபா மூன்றுக்கு கிரகநிலை, நவாம்சம், மகா தெசை விபரம் அடங்கிய குறிப்புடன் 1958-ம ஆண்டுக்கு உள்ள வருஷ பலனை சித்திரவரியாக எழுதி அனுப்புவார். இந்தவருஷம் டிசெம்பர் 31-ந் உ மட்டுமே இக்குறைந்த விகிதம் விருப்பியவர்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட்டு மூன்று ரூபாவுடன் பிறந்தவருஷம், மாதம், திகதி, நேரம், பெயர், பிறந்த இடம் என்னும் விபரத்துடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும். பிறந்த ஊர் இலங்கைக்கு வெளிநாடாயின் இன்னும் ஒருரூபா கூட அனுப்ப வேண்டும். தயவு செய்து போஸ்டல் ஆடர்களை நாச்சிமார் கோவிலடி தபாற்கந்தோரில் பெறக்கூடியதாக அனுப்பும்.

(Postal orders to be made Payable at Nachimar kovilady Post office.

MANAGER

S. Radhakrishnan
"Sripaty"
Nachimar Covil Rd
Vannnarponnai East Jaffna.

## திருவெம்பாவை உபந்நியாசங்கள்

திருவெம்பாவை உற்சவத்தைமுன்னிட்டுப் பொருத்தமான சைவசமய உபந்நியாசங்கள் நான்கினை இலங்கைச் சைவபரிபாலனசபை ஒழுங்கு செய்திருக்கின்றது சபையின் விசேஷ அழைப்பின்பிரகாரம் சைவப்புலவர் கொக்குவில் திரு த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் பின்குறிப்பிட்டபடி உபந்நியாசங்கள் நிகழ்த்துவார்கள்.

கொம்பனி வீதி சுப்பிரமணியசுவாமி கோவிலில் 27-12-57 வெள்ளிக்கிழமை இரவு 7-30 மணிக்கு "திருவெம்பாவை".

வெள்ளவத்தை மாணிக்கப்பிள்ளையார் கோவிலில் 28-12-57 சனிக்கிழமை இரவு 6-30 மணிக்கு "பிறவிப் பயன்"

விவேகானந்தசபை மண்டபத்தில் 29-12-57 ஞாயிறு சாயந்தரம் 6 மணிக்கு 'மறவா மனம்'.

செக்கடித்தெரு கதிரேசன் கோவிலில் 30-12-57 திங்கட்கிழமை சாயந்தரம் 6 மணிக்கு "முன்னோர் காட்டிய வழி".

இவ்வுபந்நியாசங்களில் முதலாவது உபந்நியாசத்தை அஞ்சல்செய்ய இலங்கைவானொலி ஸ்தாபனத்துடன் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

உபந்நியாசங்கள் செய்யும் திரு குமாரசுவாமிப்பிள்ளை அவர்கள் இலங்கைச் சைவ பரிபாலனசபை ஆரம்ப நாட்களில் சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் காலத்தில் கொழும்பில் சபையின் பேரால் தொண்டு செய்தவர்கள். திருவெம்பாவை மகத்துவத்தையும் உபந்நியாசம் செய்பவரையும் நோக்கி ஏராளமான சைவ அடியார்கள் கேட்டின்புற எதிர்பார்த்திருக்கிறார்கள்.

## ஆலய நிர்வாகமும் திருத்தல வாசமும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து வணங்கிச் சிவசாயுச்சியம் பெற்றார். தலவாச வாழ்க்கைகுடும்பவாழ்க்கை போன்றதல்ல. இதனைக் கோயில் நிர்வாகிகள் உய்த்துணர்தல் வேண்டும். ஆலயத்தில் பணி செய்வோர் யார், அதில் வாசம் செய்வோர் யார், அதில் வழிபடுவோர் யார், மடம் என்றால் என்ன? அதை எவ்வாறு நிர்வகிக்கவேண்டும். மடத்தில் இருப்போர் எப்படி இருத்தல் வேண்டும். என்பதை நிர்வாகஸ்தர்கள் தெளிவாய் உணர்தல் வேண்டும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலப்பெருந்தகையாரும் இதனை வற்புறுத்தியிருக்கின்றார்கள்.

# விடாமழையால் வெள்ளப்பெருக்கு

## இரணைமடுக் குளஉடைப்பால் ஏராளமான நட்டம்

மழை மழை என்று, பெருமழை என்று, பிரளயமோ என்று ஐயுறுமாறு பெய்கின்றது மழை பல்லாயிரக்கணக்கான மக்கள் பல்வேறு வகையில் நட்டமடைந்து பல்வேறு இன்னல்களுக் குள்ளாயினர். வடக்குக்கிழக்கு மாகாணங்களில் வீடிழந்தனர் ஆயிரக்கணக்கானனோர். வடக்கு மாகாணத்தில் வெங்காயச் செய்கை அழிவடைந்துவிட்டது. கிழக்கு மாகாணத்திற் பல்லாயிரம் ஏக்கர் நெல்லுப் பாழாய்ப் போயது. மட்டக்களப்பு மக்கள் பல பக்கத்தால் பாதிக்கப்பட்டுத் தாங்கமுடியாத துன்பத்துக்குள்ளாயினர். மட்டக்களப்புப் பிரதிநிதி உடனுதவி வேண்டிநிற்கின்றார். உடன் உதவி உடன் உதவி என்ற சத்தம் எல்லாப்பக்கங்களிலுமிருந்து உரத்துக் கேட்கின்றது. அரசாங்கம் எதைச் செய்யுமோ எதை விடுமோ என்று தெரியாதென்ற அச்சமுண்டாகின்றது. உதவி நிதிகளும் உருவாக்கப்படுகின்றன. உதவக்கூடிய ஒவ்வொருவரும் உதவியேயாகவேண்டுமென்ற கருத்து எங்கும் பரவுகின்றது. நிலைமை என்னாகுமோ என்ற அச்சப்பேச்சே எவர்வாயிலும் இன்று வந்துகொண்டிருக்கின்றது.

பெருமழை தொடர்ந்து பெய்வதால் மட்டக்களப்பில் வீடிழந்த மக்களின் தொகை 90, 000 என்றும் யாழ்ப்பாணத்தில் 30, 000 என்றும், கல்லோயா குறுலுவெவா, கிளிநொச்சிப் பகுதிகளின் நிலைமையும் ஆபத்தானதாயிருக்கின்றதென்றும் அறிய வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்க்கும்
ஆசிரிய மாணவர்க்கும் உரிய
அரிய நூல்!
**படிப்பிக்கும் முறை களும் விதிகளும்**

சைவத் திருவாளர்
சு. சிவபாதசுந்தரம்பிள்ளை
B. A, அவர்கள் இயற்றியது
புதுக்கிய இரண்டாம்பதிப்பு.
விலை: ரூபா 3-00
அதிபர்
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.

இந்துசாதனக் கல்விக் கதிர்
இல. 6
சைவசமயம், கல்வி
இலக்கியம், கணித விஞ்ஞானம்
இந்துசாதன இளைஞர் பகுதியாகப்
பட்சந்தோறும் வெளிவருவது

**முத்திசாதன முறை**
இது
கர்மயோகம், பக்தியோகம்,
இராஜயோகம், ஞானயோகம்
என்பனவற்றைத்
தெளிவாக விளக்குவது
20 அத்தியாயம்,
264 பக்கம்.
விலை ரூபா 1/=
அதிபர்:
"இந்துசாதனம்"
யாழ்ப்பாணம்.

# சுந்தரமூர்த்தி நாயனார்

தேவாரம் பாடியருளிய மூவருள் ஒருவர் சுந்தர மூர்த்திநாயனார். இவர் தென்னிந்தியாவிலுள்ள திருமுனைப்பாடி நாட்டில், திருநாவலூரில் வாழ்ந்த ஆதிசைவராகியசடையனார்க்கும், அவர் மனைவியார் இசைஞானியார்க்கும் திருமகனாய்த் திருவவதாரம் செய்தார். அவருக்கு நம்பியாரூரர் என்ற பெயரிட்டு வளர்த்து வந்தனர். அந்நாட்டு மன்னராயிருந்த நரசிங்க முனையர் என்பவர் அப்பிள்ளையைத் தாய் தந்தையரிடம் பெற்று வளர்த்தார். கலை பல கற்று மணப் பருவம் அடைந்த நம்பியாரூரருக்குப் புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியர் மகளை மணம் பேசினர். திருமணத்திற்குக்குறித்தநாளில்புத்தூரில் சடங்கவிசிவாசாரியர் இல்லத்தில் திருமணப் பந்தரில் நம்பியாரூரரும் பிறரும் கூடித் திருமணம் நடத்தும் வேலையில் ஈடுபட்டிருந்த போது முதியவராகிய அந்தணர் ஒருவர் அங்கு வந்து, "யாவரும் நான் கூறுவதைக் கேளுங்கள்: இம் மணமகனுக்கும் எனக்கும் உள்ள ஒரு வழக்கைத் தீர்த்தபின்னர்த்தான் மணம் நடக்கவேண்டும்" என்று கூறினார். நாவலூரர் அதற்கு இசைந்தார். "இந்நம்பியாரூரன் எனக்கு அடிமை" என்று முதியவர் கூறக்கேட்ட அனைவரும் அதை நம்பவில்லை. "அந்தணர்க்கு அந்தணர் அடிமை என்று கூறும் நீர் பித்தரோ?" என்று நம்பியாரூரர் கூறினார். முதியவர் "நான் பித்தனாயினும் ஆகுக: பேயன் ஆயினும் ஆகுக. நீ எத்தனை கூறினும் நான் நாணமாட்டேன். என்னை அறியாமற் பேசுகிறாய். உன்பாட்டன் எழுதிக்கொடுத்த ஓலை இதோ உள்ளது; பேசிப் பயனில்லை. பணி செய்ய வேண்டும்" என்று கூறினார். அவ்வோலையைக்காட்டுமாறு நம்பியாரூரர் கேட்டார். "ஓலையைக் காணத் தக்கவன் நீ அல்லை. சபையோர்முன்காட்டினால் பணி செய்ய வேண்டியவன்' என்று அம்முதியவர் கூற நம்பியாரூரர் வெகுண்டு அவ்வோலையைப் பறிப்பதற்கு நெருங்கினார். கிழவர் ஓடினார். கிழவரிடமிருந்த ஓலையை நம்பியாரூரர்பறித்துக் கிழித்தெறிந்தார். கிழவர் இது முறையோ! "இது முறையோ!!" என்று கூவினார். அவையோர் ஆரூரரைத் தடுத்து முதியவரை நோக்கி "உலகில் இல்லாத வழக்கைக் கொண்டு வந்த நீர் இருப்பது எங்கே?" எனவினவினர். முதியவர், தம் ஊர் அருகில் உள்ள திருவெண்ணெய் நல்லூர் என்றும், நம்பியாரூரன் ஓலையைக் கிழித்ததால் தன்னை அடிமை என்று ஒப்புக்கொண்டான் என்றும் கூறினார். 'உம்முடைய வழக்கை வெண்ணெய் நல்லூரிலேயே பேசலாம்'' என்று நாவலூரர் கூற, முதியர் 'அங்கு மூலவோலையைக் காட்டி அடிமை என்பதை மெய்ப்பிப்பேன்' என்று கூறி முன் செல்ல நம்பியாரூரரும், பிறரும் அவரைப் பின்தொடர்ந்து சென்றனர். திருவெண்ணெய் நல்லூர்ச் சபையில் முதியவர் தம் வழக்கைக் கூறி, ஓலையை நம்பியாரூரர் கிழித்தெறிந்ததையும் தெரிவித்தார்.

அவையோர் நம்பியரூரரைக் கேட்க அவர், "ஆதி சைவர் மற்றவருக்கு அடிமையாதல் உண்டோ? இம் முதியவர் வல்வழக்குத் தொடுக்கிறார்" என்றார். ஓலையைக் காட்டுமாறு முதியவரிடம் அவையோர் கூற, "இந்நம்பியாரூரன் இதனையும் கிழிக்காதபடி நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்" என்று கூறி மூலவோலையைக் கொடுத்தார். சபையிலிருந்த தலைவர் அவ்வோலையைப் படித்தார்.

"திருநாவலூரில் உள்ள ஆதி சைவனாகிய ஆரூரன், திருவெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கு யானும் என் மரபினரும் வழிவழி அடிமை செய்ய மனம்இசைந்து ஓலை எழுதித் தந்தேன்; இது என்எழுத்து" என்று அதில் எழுதியிருந்தது அவையோர் நம்பியாரூரருடைய பாட்டனார் கையெழுத்தை வருவித்து ஓலையோடு ஒப்பிட்டுப் பார்த்தனர். சரியாயிருந்தது. அவர்கள் முதியவரை நோக்கி "ஓலையில் தங்கள் ஊர் இவ்வூர் என்று குறித்துள்ளது. அவ்வாறாயின் தங்கள் இருப்பிடம் இவ்வூரில் எங்குளது?" என்றுகேட்டனர்.

முதியவர் "நீங்கள் ஒருவரும் என் இருப்பிடத்தை அறியாதது வியப்பே! என்னுடன் வாருங்கள் காட்டுகிறேன்" என்று கூறி நம்பியாரூரரும் பிறரும் பின் தொடரச் சென்று 'திருவருட்டுறை' என்னும் அவ்வூர்க் கோயிலினுள் மறைந்து நம்பியாரூரர் முன் விடைமேல் உமையோடு தோன்றி "முன்பு நீர் நமக்குத் தொண்டன். நம் ஆணையால் மண்ணிற் பிறந்தாய். உன் வேண்டுகோளின்படி உலக வாழ்க்கையிற் சிக்குமுன் உன்னைத் தடுத்தாட்கொண்டோம்" என்றருளினர் முதியவராய் வந்தவர் சிவபெருமானே யென்றறிந்த நாவலூரர் தாயின் குரல் கேட்ட கன்றுபோலக் கதறி விம்மி அழுதார். தேவதுந்துபி முழங்க, தேவர் மலர்மாரி பொழிய இறைவர் "எம்மிடம் வன்மை பேசியதால் வன்றொண்டன் (வன்-தொண்டன்) என்னும் பெயர் பெற்றாய். எமக்கு அர்ச்சனை பாட்டே ஆகும். ஆதலால் நம்மேல் தமிழ்ப்பதிகம் பாடுவாய்" என்றருளினார். "தங்கள் பெருமையை எவ்வாறறிந்து என் சொல்லிப் பாடுவேன்?" என்று வன்றொண்டர் கூற, "முன்பு என்னைப் 'பித்தன்' என்று மொழிந்தாய்; ஆதலால் 'பித்தன்' என்றே பாடுக" என்றருளினார்.

உடனே வன்றொண்டர்,

தொடர்ச்சி 4-ம் பக்கம்

## இன்று திருவெம்பாவை ஆரம்பம்

## 'வாட்டடங்கண் மாதே வளருதியோ!'

(வெண்டளையால்வந்த இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா)

**ஆதியு மந்தமு மில்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே [illegible]
ஏதேனு மாகாள் [illegible]
ஈதேயென் தோழி பரிசேலோர் எம்பாவாய்,**

# ஆறுமுகநாவலர்

## செம்பாகமான செந்தமிழ் நடை

செம்பாகமான செந்தமிழ் நடையிலே தாங்கள் கருதிய விஷயங்களை வசனரூபமாகச் செவ்வனே எழுத விரும்புகின்றவர்கள் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் எழுதிய வசன நூல்களிற் சிலகாலம் பழகுதல் வேண்டும்.



நான்காம் பாலபாட புஸ்தகத்தில் ஹிந்து சமய சாஸ்திர சம்பந்தமாகவும் நீதிவிஷயமாகவும் எழுதப்பட்ட வியாசங்கள் அடங்கியிருக்கின்றன. பெரியோர்களுடன் ஒருநாட் பழகினாலும் நன்மையில்லாமற் போகாது. இந்த நான்காம் பாலபாடத்தை ஒருமுறை வாசித்தாலும், செந்தமிழ் நடையிலே எழுதவேண்டும் என்கிற எண்ணம் எவரிடத்தேனும் எழாமற் போகாது".

—தி. செல்வக்கேசவராய முதலியார் எம், ஏ. (1901)

# இந்துசாதன இளைஞர் கழகம்

இளைஞர்களே,

இக் கழகத்துக்கு விண்ணப்பம் அனுப்பிய இளைஞர்களின் பெயர்கள் இன்று வெளிவருகின்ற கல்விக் கதிரில் இடம் பெற்றுள்ளன. சென்ற கதிர்களில் நால்வருள் ஒருவராகிய 'மாணிக்கவாசகர் வரலாறு வெளிவந்தது. இன்று வெளிவரும் கதிரில் சுந்தரர் வரலாறுஆரம்பமாகின்றது. படித்து இன்புறுவீர்களாக.

27-12-57. இ. இ. க.

அன்புள்ள இளைஞர்களே,

நீங்கள் அனுப்பிய விண்ணப்பப் பத்திரங்கள் கிடைத்தன. உங்கள் பெயர்களை மகிழ்ச்சியுடன் வெளியிடுகின்றோம். இனி மேல் எழுதும் கடிதங்களிலும் கட்டுரைகளிலும் உங்கள் பெயருக்கு எதிரே உள்ள எண்ணினைக் குறித்து விடுக.

செல்வன் பரமேஸ்வரன் அம்பிகாபதி, கந்தர்மடம் 1,
செல்வி அமிர்தயோகம் சண்முகம், தெகிவலை 2
செல்வன் நடேசசர்மா கோபாலகிருஷ்ணஐயர், தெல்லிப்பழை 3
செல்வன் ச. தில்லைநடராசா, தெகிவலை 4
செல்வன் நடராச சிவபால கணேசன், தெல்லிப்பழை 5
செல்வி வைத்தீஸ்வரக்குருக்கள் மகேஸ்வரி, அச்சுவேலி 6
செல்வன் தியாகராசா சண்முகநாதன், சரசாலை 7,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்துசாதனக் கல்விக் கதிர்

இந்துசாதனம் இந்துசமய அறிவை வளர்க்கும் வாரப் பத்திரிகை. ஆங்கிலத்திலும் இது வாரந் தோறும் வெளிவருகின்றது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் பெருமையினை விளக்கும் கலங்கரை விளக்கங்களுள் ஒன்ருக நிலவுவது. நாவலர் உள்ளக்கருத்தினின்றும் பிறந்த யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் நடத்தப்படுவது.

இப்பத்திரிகையில் வெளிவரும் விஷயங்களுள், கல்வி பற்றிய விஷயங்களைக் கொண்டது இந்துசாதனக் கல்விக் கதிர். இஃது இருவாரத்திற்கொருமுறை வெளியிடப்படுவது; மாணவர்க்கும் ஆசிரியர்க்கும், கல்வித் துறையிலே தொண்டாற்றும் பிறர்க்கும் பெரிதும் பயன்படும். 4 பக்கம் கொண்டது.

பத்துச்சத முத்திரை அனுப்புவோர்க்கு மாதிரிப் பிரதி அனுப்பப்படும்.


இந்துசாதனக் கல்விக் கதிர்

**சந்தா விபரம்**

**தனிப்பிரதி சதம் ஐந்து**

தபாற்செலவுடன் ஓர் ஆண்டிற்கு

தனிப்பிரதி ரூபா **2-25**

**2** பிரதிகள் ,, **3-50**

**3** பிரதிகள் ,, **5-00**

**அதிபர், "இந்துசாதனம்" யாழ்ப்பாணம்**


# செயற்கைச் சூரியன்

## அணுச் சக்தித் துறையில் ஆங்கிலேயர் முன்னேற்றம்

'செயற்கைச் சூரியன்' ஒன்றைப் பிரித்தானியர் ஆக்கியிருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகிருர்கள்.

தொழிலியற்றுறையில் அணுசக்தியைப் பயன்படுத்துவதில் அமெரிக்காவைவிடப் பிரித்தானியா முன்னேறி விட்டதாகவும் பிரித்தானியாகண்டுபிடித்தவை ஓரளவுக்கு ரூசியாவின் செயற்கை நிலாவின் முக்கியத்துவத்துக்கு இணையானவை என்றும், பிரித்தானிய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞான ஆராய்ச்சியாளர் கருதுகிருர்கள்.

செயற்கை நிலாக்களை வான வெளியிற் பறக்க விட்டும், கண்டம் விட்டுக் கண்டம் செல்லும் பறக்கும் குண்டுகளை ஏவிவிட்டும் வெற்றிகொண்டாடியது கண்டு மனம் நொந்துள்ள அமெரிக்க மக்களின் உணர்ச்சியைப் புண்படுத்தக் கூடாது என்பதற்காகப் பிரித்தானியாவின் புதிய சாதனைகள் அடக்கமாக வைக்கப்பட் டிருப்பதாகப் பிரித்தானிய புதினத் தாள்கள் கூறுகின்றன.

பிரித்தானிய விஞ்ஞான சாதனைகளைக் கவனிக்கும்போது உரூசியச் செயற்கை நிலாக்கள் மதிப்பிழந்தவைகளாகக் காணப்படும். கடலிலிருந்து எரிபொருள், வெப்பம், மின்சத்தி ஆகியவற்றைப் பெறுவதிலும் பிரித்தானியா முன்னேறியிருக்கிறது என்று கூறப்படுகிறது. பிரித்தானிய தொழிலியற்றுறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தக்கூடும் எனவும் கூறப்படுகிறது.

அமெரிக்காவுக்குச் சங்கடமான நிலைமையை ஏற்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டு இந்தச் சாதனைகளை அடக்கமாக வைத்திருக்கும்படி பிரித்தானியாவைக் கேட்டுள்ளனர் என வெளிநாட்டுத் துறையைச் சேர்ந்த ஒரு அதிகாரி கூறியதாக நியூயோர்க் நகரிலிருந்து ஒரு நிருபர் செய்தி அனுப்பியுள்ளார்.

### செயற்கைச் சூரியன்

அணுசக்தியைக் கட்டுப்படுத்துவதற்கான சோதனைகளில் பயன்படுத்தப்படுகிற 'ஜெஹ்ரு' என்ற இயந்திரத்தின்மூலம் கிடைத்த தகவல்கள் நம்பிக்கை அளிப்பதாக இருக்கிறது என்று கடந்தவாரம் பிரித்தானிய தலைமை அமைச்சர் மாக்மிலன் அறிவித்திருந்தார். செயற்கைச் சூரியன் ஒன்றை பிரித்தானியா உருவாக்கி இருக்க வேண்டும் என்பதே இதன் பொருள் என்று விஞ்ஞானிகள் கருதுகிருர்கள். தலைமை அமைச்சர் விபரம் எதுவும் வெளியிடவில்லை என்ருலும், புத்தாண்டுத் தொடக்கத்தில் "முழு விஞ்ஞான விபரங்கள்" வெளியிடுவதாக பாராளுமன்றத்தில் மக்கள் அவைத் தலைவர் திரு. பட்டிலர் உறுதிமொழி அளித்துள்ளார்.

—0—

## மணிவாசகர் விழா

காரைநகர் - யாழ்ப்பாணம்

——0—0——

ஏவிளம்பி ஹு மார்கழிமீ 13, 14, 15, 16, 17, 18, 19, 20 திகதிகள் (டிசம்பர் 28, 29, 30, 31 ஜனுவரி, 1, 2, 3, 4, 1958) கோயம்புத்தூர் நிர்மலாக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை **புலவர் C. N. குழந்தையம்மாள் அவர்கள்** (சென்னைச்சட்டசபைஅங்கத்தவர்) விழாவை ஆரம்பித்து வைப்பார்கள். பேராசிரியர்கள் பலர் விரிவுரை நிகழ்த்துவார்கள்.

# சுந்தரமூர்த்தி நாயனர்

3-ம் பக்கத் தொடர்ச்சி

"பித்தாபிறை சூடிபெரு
மானே அருளாளா
எத்தான்மற வாதேநினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத்
தென்பால் வெண்ணெய்
நல்லூர்அருட் டுறையுள்
அத்தாவுக் காளாயினி
அல்லேன்எனல் ஆமே"

என்று தொடங்கும் பதிகம் பாடிப் பரவினர். இதைக்கேட்டு மகிழ்ந்த பரமர் 'இன்னம்பலவாறு பதிகம் பாடுக" என்று கூறி மறைந்தருளினர். மணம் தவிர்ந்த சடங்கவியரர் மகள் நம்பியாரூரரையே நினைத்திருந்து சிவனடியுற்ருர். வன்ருெண்டர் திருநாவலூர் அடைந்து சிவபிரானைப் பதிகம் பாடிப் பல தலங்களையும் பணிந்து பதிகம் பாடிக்கொண்டே சென்று திருவதிகையை அடைந்தார்.

### திருவடி சூட்டுதல்

திருநாவுக்கரசர் உழவாரத் திருப்பணி செய்த தலமாதலால் திருவதிகைத் தலத்தை மிதிக்க அஞ்சிப் புறத்திலிருந்தே வணங்கிச் 'சித்தவடம்' என்னும் மடத்தில் தங்கித் துயின்ருர். அப்போது சிவபெருமான் முதிய அந்தணராய் வந்து நம்பியாரூரர் முடிமேல் தம் திருவடியை வைத்துத் துயில்வார் போன்றிருந்தார். விழித்தெழுந்த வன்ருெண்டர் 'இவ்வாறு செய்வதேன்?' என்று கேட்டதற்கு முதியவர் 'முதுமையால் அவ்வாறு செய்துவிட்டேன்' என்று கூறினர். வேறிடத்தில் இவர் துயின்றபோதும்பெரியவர் அவ்வாறே செய்ய ஆரூரர் சினந்து "பல முறையும் இவ்வாறு செய்யும் நீர் யார்?" என்று கேட்டார். அவர், "என்னை நீ அறிந்திலையோ?" என்று கூறி மறைந்தார். சிவபெருமானே இப்படிச் செய்தவர் என்றறிந்த அடியவர்,

"தம்மானை அறியாத
சாதியார் உளரே"

என்னும் பதிகம் பாடி அதிகைப் பெருமானைப் போற்றினர்.

அங்கிருந்து வழியில் உள்ள தலங்களை வணங்கிக் கொண்டே சிதம்பரத்தைஅடைந்தார் பொன்னம்பலத்தில் திருநடம் புரியும் பெருமானைக் கண்ணுரக் கண்டு பதிகம் பாடிப் போற்றினர். "திருவாரூர்க்குவருக" என்ற இறைவன் ஆணையைத் தலைமேற்கொண்டு ஞானசம் பந்தர் அவதாரஞ் செய்த சீர்காழிப் பதியைப் புறத்திலிருந்தே போற்றித் திருவாரூர் சென்று சேர்ந்தார்.

### பரவையார் திருமணம்

திருவாரூர் மக்கள் சுந்தரரை எதிர்கொண்டழைத்தனர். தேவாசிரியன் என்னும் மண்டபத்தை வணங்கித் திருக்கோயிலிற் சென்று பதிகம் பாடித் துதித்தார். அப்போது 'நம்மை உனக்குத் தோழமையாகத் தந்தோம். தடுத்தாட் கொண்டபோது கொண்டிருந்த திருமணக் கோலத்துடனிருந்து பதிகம் பாடுக" என்று வன்மீக நாதர் அருளினர். ஆரூரர் அன்று முதல் 'தம்பிரான்தோழர்' 'திருமணக்கோலப் பெருமாள்' என்னும் திருப்பெயர்கள் பூண்டு விளங்கினர்.

திருவாரூரிற் பிறந்த பரவையார் என்னும் மங்கையார் சிவனடி மறவாச் சிந்தையினர் அவர். திருக்கோயிலுக்கு வந்தபோது சுந்தரர் அவரைக் கண்டு மணந்துகொள்ள எண்ணினர். சுந்தரர் பேரழகைக் கண்ட பரவையார் மனமும் நெகிழ்ந்தது. திருவாரூர்ப் பெருமான் அடியார் கனவிலே தோன்றி இருவர்க்கும் திருமணம் நடத்தி வைக்குமாறு பணித்தார். திருமணம் இனிது முடிந்தது.

பரவையாருடன்வாழ்ந்து வரும் நாளில் தம்பிரான் தோழர் தேவாசிரிய மண்டபத்தில் கூடியிருந்ததொண்டர்களைப் பார்த்து "யான் இவர்களுடன் சேர்ந்திருப்பது எந் நாளோ?" என்றெண்ணித் திருக்கோயிலினுட் சென்று பணிந்தார் இறைவர் தொண்டர்களைப் புகழ்ந்து பாடுமாறு வன்ருெடர்க்குக் கூறித் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" என்று முதல் அடியெடுத்துக் கொடுத்தருளினர். அதை முதலாகக் கொண்டு நாயன்மார்களைக் குறித்துத் திருத்தொண்டத் தொகை பாடியருளினர்.

### நெல் பெறுதல்

திருவாரூர்க் கருகிலுள்ள குண்டையூரில் இருந்த ஒரு வேளாளர் சுந்தரரிடம் அன்பு பூண்டு உணவுக்கு வேண்டிய நெல்லும் காய்கறிகளும் கொடுத்து வந்தார். அக்காலத்தில் உண்டான கொடிய பஞ்சத்தால் உணவுப் பொருள் அனுப்ப முடியவில்லை யென்று வருந்திக் கொண்டிருந்த குண்டையூர்க் கிழார் கனவில் சிவபெருமான் தோன்றி 'சுந்தரனுக்குக் கொடுக்க நெற்குவியல் தந்தோம்' என்றருளி ஊர் முழுதும் நெல்மலை தோன்றும்படி செய்தருளினர். வேளாளர் விழித்தெழுந்து சுந்தரரிடம் சென்று இதைக் கூறினர். அவர் திருக்கோளிலிப் பரமனை வணங்கி,

"நீள நினைந்தடியேன் உம்மை
நித்தலும் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள்
வாடி வருந்தாமே
கோளிலி யெம்பெருமான்
குண்டையூர்ச்சில நெல்லுப்
பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை
அட்டித் தரப்பணியே"

என்று தொடங்கும் பதிகம் பாடினர். அன்றிரவிற் பூதங்கள் அந்நெல்லைத் திருவாரூரிற் சேர்த்தன. பரஙவயார் அனைவரையும் அதை வாரிக்கொள்ளும்படி செய்து தமக்கு வேண்டிய அளவு எடுத்துக்கொண்டார்.

### செங்கல் செம்பொன் ஆனது

கோட்புலி நாயனர் வேண்டுகோளின்படி அவரூராகியதிருநாட்டியத்தான் குடிக்கு ஆரூரர் சென்று அந்த நாயனர் மனையிலே திருவமுது செய்தார். அவர் தம் மகளிராகிய சிங்கடி, வனப்பகை என்னும் இரு பெண்களையும் மணந்துகொள்ள வேண்டினர். சுந்தரர் அவ்விருவரையும் தம் புதல்வியராகக் கொண்டு 'சிங்கடி வனப்பகை அப்பன்' என்று பதிகத்தில் பாடினர். திருவாரூரில் பங்குனித் திருவிழா நெருங்கியபோது பரவையார்செலவுக்குக் கொடுக்கப் பொன் வேண்டுமென்று திருப்புகலூர் சென்று இறைவனை வேண்டினர். அங்குத் துயின்றபோது தலைக்கு உயரமாக வைத்திருந்த செங்கற்கள் செம்பொன்னுக மாறியிருந்தன. அவற்றைத் திருவாரூர்க்குஎடுத்து வந்தார்.

### பொன் பெற்றது

திருப்பாச்சிலாச்சிரமத்திலும் இறைவனைப் பாடிப் பொன் பெற்ருர். கொங்கு நாட்டுத் தலங்களை வணங்கித் திருப்பேரூரில் இறைவன் திருநடங்கண்டு மீண்டபோது திருமுதுகுன்றத்துக்கு வழிதெரியவில்லை. பரமன் ஒரு முதியவராக வந்து 'இது கூடலையாற்றூர் செல்லும் வழி' என்று கூறி மறைந்தார். சுந்தரர் அவ்வூர்க்குச் சென்று, பின் திருமுதுகுன்றம் அடைந்து பதிகம் பாடிப் பன்னீராயிரம் பொன் பெற்ருர். அதை மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர்க் குளத்தில் வரச் செய்தருள வேண்டிக்கொண்டு பல தலங்களை வணங்கித் திருவாரூரை அடைந்தார். பரவையாரை உடனழைத்துக் கொண்டு சென்று குளத்தில் இறங்கித் தேடினர். பொன் கிடைத்திலது. "ஆற்றில் இட்டுக் குளத்தில் தேடினல் கிடைக்குமோ?" என்று கூறிப் பரவையார் நகையாடினர். ஆரூரர் வெட்கி "பொன் செய்த மேனியினீர்" என்று தொடங்கும் பதிகம் பாடப் பொன் கிடைத்தது.

(வரும்)

—:0:—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறைடிஸ்திக்கோட்டு 5395-ம் இலக்க வழக்கில் 1957ம் ஆ. கார்த்திகை மீ 21-ம் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1958-ம் ஆ. மாசி மீ 1-ந் திகதி சனிக்கிழமை முற்பகல் 8-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பின்னுற்காணும் ஆதன டாப்பின் ஒழுங்கின்படி என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

கரணவாய் வடக்கு கந்தையா சங்கரப்பிள்ளை கைம்பெண் கதிராசிப்பிள்ளை காலஞ்சென்ற கே. சங்கரப்பிள்ளையின் மரணசாதன தத்துவகாரி என்ற வகையில்

வழக்காளி

எதிராக

கரணவாய் வடக்கு தற்காலம் அனுராசபுரம் ஓவசியர் சின்னையா கந்தசாமி

எதிராளி

அறவிடவேண்டிய தொகையின் விபரம்

சித்தாரித்த தொகை ரூபா 10,440. ரூபா 6000 க்கு 3-5-56 தொடக்கம் 24-8-56 வரைக்கும் 10 வீத வட்டி ரூபா 175 ரூபா 10615 ரூபா 10615 ல் ரூபா 2000 கழித்து அதாவது ரூபா 8615 க்கு 24-8-56 தொடக்கம் 15-11-57 வரைக்கும் 5 வீத வட்டி ரூபா 537-75 மொத்தம் ரூபா 11,152-75 கொடுபட்ட ரூபா 2000 நீக்கி மிகுதி ரூபா 9152-75 கோட்டுச் செலவு ரூபா 353-06 மொத்தம் ரூபா 9405-75 கோட்டுச் செலவால் கொடுபட்ட ரூபா 250 நீக்கி மிகுதி ரூபா 9155-75

ஆதன டாப்பு

1 கரணவாய் நவிண்டிற்குறிச்சியிறை முக்காற்பத்தனை நில பர, 27 குளி 12 எல்லை கிழக்கும் வடக்கும் நடைவரம்பு. மேற்கு சின்னத்தம்பியார் தினகரிப்பிள்ளையின் உரிமைக்காரருடைய ஆதனம். தெற்கு வெற்றிவேலு பெண் செல்லம்மாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ் வெல்லைக்குட்பட்ட நிலத்தில் சொரியலாய் நிலபர 1 1/2 ம் கிணற்றிற்குரிய பங்கும்.

2 கரவெட்டி குறுளிக்குறிச்சியிறை சாண்டான்பாதி நில. பர. 18 குளி 10 6/32. இதில் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 6614-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் அணைக்கப்பட்ட அளவு படத்தில் கண்ட 3-ம் துண்டுக்கு நில பர 4 குளி 1 18/32 எல்லைகிழக்கு 4-ம் துண்டு வடக்கு சடையர் தம்பையாவுக்கும் மறுபேருக்கு முடைய ஆதனம், மேற்கு குறித்த படத்தில் 2-ம் துண்டு தெற்கு இளையதம்பியார் சிதம்பரத்துக்குடைய ஆதனமும் ஒழுங்கையும். இவ் வெல்லைக்குட்ட நிலம் பனைகள் அடங்கலும்.

3 கரணவாய் நவிண்டிற்குறிச்சியிறை நவிண்டிற்குழம் ஏக்கர் 1 றூட் 1 பேட்சு 33, எல்லை கிழக்கும் தெற்கும் வெள்ள வாய்க்கால், வடக்கு எதிராளிக்குடைய ஆதனமும் மறு ஆதனங்களும், மேற்கு மயில்வாகனம் கந்தையாவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனமும் வெள்ள வாய்க்காலும். இதடங்கலும்,

4 ஷை இறை தெயக்கிரியும் கொளனியன் தோட்டமும் ஆண்டி பனந்தோட்டமும் நி பர 14 குளி 7 27/32 இதில் நிந்தமான நி பர 10 எல்லை கிழக்கு முத்துச்சாமி ஐயர் இராமநாத ஐயருக்கும் மனைவிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனமும், வடக்கும் மேற்கும் அம்பிகாபதிக் குருக்கள் இராமநாத சர்மாவுக்குடைய ஆதனமும் ஒழுங்கையும், தெற்கு ஒழுங்கை இவ்தெல்லைக் குட்பட்டவைகள் யாவும்.

5 ஷை இறை சாந்தா விதானைப்புலம் நி பர 27 குளி $5\frac{1}{4}$ இதில் தென்மேற்குப் புறமாக நில பர 3 1/2 எல்லைகிழக்கு கந்தசாமி பெண் தங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் வடக்கு வெற்றிவேலு சிவசிதம்பரத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் மேற்கு சின்னவி கிட்டினருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு சபாபதி வல்லிபுரத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம் இதடங்கலும் முழுக் காணிக்குட்பட இருக்கும் கிணற்றிலும் அதில் அமைக்கப்பட்ட இயந்திரத்திலும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்,

S. C. Kanagasabai
கொம்மிஷனர்
புலோலி கிழக்கு,
20-12-57.
M. 192 27-12-57.

---

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

**1918-ம் ஆ. ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி **8** லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா
**616313,00**
**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்
**S. கனகசபை**
Std 14 சிறுப்பர்

---

## ஆங்கிலமே அரசகரும மொழியாயிருத்தல் வேண்டும்

### நாட்டு ஒற்றுமைக்கு இன்றியமையாதது அதுவே

**தென் இந்திய அறிஞர் மகாநாட்டுத் தீர்மானம்**

இந்திய அரசகருமமொழி பற்றி ஆலோசித்தற்குத் தென் இந்திய அறிஞர் மகாநாடொன்று சென்னையில் நடைபெற்றது. கலாநிதி சி. பி. இராமசாமிஐயர் அவர்கள் தலைமையில் நடந்த இம் மகாநாட்டில் ஸ்ரீ. சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் ஆங்கிலமே இந்திய அரசகரும மொழியாய்த் தொடர்ந்திருத்தல் வேண்டும் என்னும் பிரேரணையைப் பிரேரித்தார். இன்றுள்ள நிலைமையில் நாட்டுமக்களுக்குள் ஒற்றுமை நிலவுதலே இன்றியமையாது முதலாவதாய் வேண்டப்படுதலின் அதற்குச் சாதகமானவற்றையே அரசாங்கம் கடைப்பிடித்தல் வேண்டுமென்று குறிப்பிட்டு ஆங்கிலமே அரசகரும மொழியா யிருத்தல் வேண்டுமென்பதற்குப் பத்து நியாயங்கள் காட்டப்பெற்றன.

இந்திமொழி பேசாதாரின் உணர்ச்சியை மதித்தல், பிரிவினையைத் தடுத்தல், சிறுபான்மையினரின் கருத்தைப்பேணுதல், 42விகித மக்களே இந்தியைப் பேசுதல், ஒரு நூற்றூண்டுக்கு மேல் ஆங்கிலம் அரசகரும மொழியாயிருந்தமை, பொதுக்கல்விக்கும் சர்வகலாசாலைக் கல்விக்குமுள்ள தொடர்பு, விஞ்ஞானம் முதலிய பல துறைகளுக்கு இன்றியமையாமை, ஒவ்வொரு மாகாண மொழியும் அம்மாகாண அரசகரும மொழியாயிருத்தல். மாகாண அரசாங்கங்களுக்கும் உலக அரசாங்கங்களுக்குமிடையிற் செயலாற்றுவதற்குள்ள வசதி, கல்விச் செலவைக் கூடுமான அளவுக்குக் குறைக்கவேண்டிய தேவை ஆகியவை அப்பத்து நியாயங்களாகும்.

இத்தொடர்பில் வேண்டியது செய்தற்கு ஓர் செயற் குழுவும் அமைக்கப் பெற்றது.

### தேகவியோகம்

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை அலுவலர் தலைவனுய்க் கடமையாற்றும் திரு. நா. மயில்வாகனம் அவர்களின் தந்தையார் திரு. ஆறுமுகம் நாகலிங்கம் அவர்கள் தமது 85-ம் வயதில் கந்தரோடையிலுள்ள தமது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு (22-12-57) இவ்வுலக வாழ்வை நீத்தார். அடுத்த நாளாகிய திங்கட்கிழமை 23-12-57-ல் அவருடைய ஈமக்கிரியைகள் பல சுற்றமித்திரர் சமுகத்திற் சிறப்பாக நடைபெற்றன. இறைவன் திருவருளால் அன்னார் ஆன்ம சாந்தியடைவாராக,

---

—மாணுக்கர்—

# கேத்திர கணிதம்

நூலாசிரியர்
திரு. வ. பொன்னையா B. A. (Hons) Ph. D.

**7ஆம் வகுப்புத் தொடக்கம் கல்விப் பொதுத் தகுதிப் பத்திர வகுப்பு வரைக்கும் பயன்படத் தக்கது.**

கலாசாலைகளில் வழங்குதற்கு இலங்கை அரசுக் கல்வியதிகாரியின் அங்கீகாரம் பெற்றது.

இலங்கையரசுத் தன்மொழி யலுவலகத்தாரால் வெளிப்படுத்தப்பட்ட கலைச் சொற்களே இந் நூலில் எடுத்தாளப்பட்டன, 468 பக்கங் கொண்டது. விலை ரூபா 5-50.

ஏக வினியோகஸ்தர்கள்:
கொழும்பு அப்போதிக்கரிஸ் பிரசுரங்களுக்கு
வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு விநியோகஸ்தர்கள்:

**விவேகானந்தஅச்சகம் - புத்தகசாலை**
விவேகானந்தாக் கட்டடம்,
யாழ்ப்பாணம்.
போன்: 517 :: தந்தி: "பிறின்ரேஸ்"

M. 180 13, 20-12-57

---

## மயிலிட்டி தெற்கு இளஞ் சைவத் தொண்டர் சபை

### 17-ம் ஆண்டு நிறைவு விழா

மேற்படிசபையின் 17-வது ஆண்டு நிறைவுவிழா நிகழும் மார்கழித் திங்கள் 5-ம் நாள் (20-12-57) வெள்ளிக்கிழமை மாலை மயிலிட்டி தெற்கு ஞானவயிரவராலய மண்டபத்தில் பண்டிதர் திரு. இ. நமசிவாயம் அவர்கள் தலைமையில் ஆரம்பமாகித் திருமுறைகள் ஓதப்பட்ட பின் தலைவர் அவர்கள் முன்னுரை நிகழ்த்தினுர்கள். பின்பு அறிக்கைப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டுச் சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அதன்பின் "குருபக்தி" என்னும் பொருள்பற்றி திரு. செ. கோவிந்தசாமி அவர்கள் சொற்பொழிவாற்றும்போது உலோகாயதம்மலிந்து சைவம் குன்றும் இக்காலத்தில் ஒவ்வொரு சைவனும் செய்ய வேண்டிய கடமைகளைப்பற்றியும், ஆசாரத்தின் இன்றியமையாமைபற்றியும், குருபக்தியின் அவசியம்பற்றியும் பல மேற்கோள்களுடன் தமது சொற்பொழிவில் வலியுறுத்தினுர்கள். பின்னர் "கடவுள்" என்னும் பொருள் பற்றி, பண்டிதர் திரு. வ. முத்துக்குமாரு அவர்கள் சொற்பொழி வாற்றினுர்கள். அவர்கள் தமது பேச்சிலே கடவுள் வழிபாட்டின் அவசியம் பக்திமார்க்கம் ஆகியவைபற்றி விரித்துக் கூறினுர்கள். தலைவர் அவர்கள் பின்னுரை நிகழ்த்திய பின் திரு. த. கதிரவேலு நன்றியுரை கூறினுர். திருமுறை ஓதப்பட்டபின் அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது.

புதுவருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். போஷகர்கள்; திருவாளர்கள் இ. நமசிவாயம், வ. முத்துக் குமாரு, க. சின்னப்பு. தலைவர்: திரு. த. கதிரவேலு, உபதலைவர் திரு நா. குலசிங்கம் திரு. மு சிவசேகரம், காரியதரிசிகள்: திரு. நா. சிவராசலிங்கம், திரு. வே நவரத்தினம், உபகாரியதரிசி திரு. வ. சின்னத்துரை, தனுதிகாரி திரு. த. பாலசுப்பிரமணியம். உபதனுதிகாரி திரு. நா. சிவஞானலிங்கம். நிர்வாகசபைஅங்கத்தவர்கள்: திருவாளர்கள்: வ. பாலசுப்பிரமணியம், ச. திருஞானசம்பந்தமூர்த்தி, பொ. சண்முகரத்தினம். கணக்குப்பரிசோதகர்கள்: திரு. க. சிதம்பரநாதன் திரு.செ.கோவிந்தசாமி.

---

## விண்ணப்பப் பத்திரம்

**'இந்துசாதன இளைஞர் கழகம்'**

இந்துசாதனக் காரியாலயம்
**யாழ்ப்பாணம்**

அன்பு கூர்ந்து என்னை 'இந்துசாதன இளைஞர் கழகத்திற் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

முழுப்பெயர்..............................
வகுப்பு ..........பிறந்த திகதி..............................
விலாசம் ..............................
..............................
கையெழுத்து ..............................
திகதி ..............................

தந்தையாரின் /
ஆசிரியரின் கையெழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

கரம்பன் V. மாணிக்கம் கைம் பெண் யோகம்மா
வழக்காளி
இல. M B 1686
எதிராக
கரம்பன் கார்த்திகேசு சின்னத்தம்பி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 1686ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1958 ௵ தை மீ 24 உ வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1000/-ம் இதில் ரூபா 500/-க்கு 14-6-57 திகதி தொடக்கம் 30-7-57 வரைக்குப் வருடமொன்றுக்கு 100-க்கு 12 வீத வட்டியும் அதன மேல் முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 162-47.

### காணி விபரம்

1 வடமாகாணம்யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறைக் கோயிற்பற்று கரம்பன் இறை குறைக்காடு தெற்கும் குறைக்காடு கேணிக்கு மேற்கும் வடக்கும் நிலப்பரப்பு 53-ம் வீடும் கிணறும் செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் கந்தையா பெண் தெய்வானையும் வடக்கு சின்னத்தம்பி பெண் சின்னச்சியும் பேதுருப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளையும் பங்காளரும் பேதுருப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளையும் மேற்கு. பேதுருப்பிள்ளை நீக்கிலாப்பிள்ளையும் நாராணி இராமனுதரும் சீனித்தம்பி பெண் சிவகாமிப்பிள்ளையும் தெற்கு சீனித்தம்பி பெண் சிவகாமிப்பிள்ளையும் நாகமுத்து வயித்திலிங்கமும் இதில் சொரியலாய் நிலப்பரப்பு 17 குளி 12ல் அரைவாசி அதாவது முழுவதிலும் சொரியலாய் 55/318 பங்கும் வீடு கிணறு செய் பயிர் வான் பயிர்களில் அரைவாசியும்,

2 ஷை கரம்பன் இறை குறைக்காடு நிலப்பரப்பு 10ம் பனைகளும் எல்லை கிழக்கு நாகப்பர் வினுசித்தம்பியின் உருமைக்காறர். வடக்கு கந்தையா பெண் தெய்வானை மேற்கு நாகமுத்து வயித்திலிங்கமும் நாகலிங்கம் பெண் விசாலாட்சியும் பங்காளரும் இதடங்கலிற்சொரியலாய்அரைவாசி.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
2-12-57.
M 193. 27-12-

## கோட்டு விற்பனவு விளம்பரம்

காரைநகர் வடக்கு கந்தப்பு சின்னத்தம்பி
வழக்காளி
இல, M. B. 1019
எதிராக
1. யாழ்ப்பாணம் பெரியகடை சேயிட் சுல்ருன் அப்டுல்காடர் மொகமட் அப்டுல்காடரும் பெண்
2. காதி அபூபக்கர் ரூேட்டு முசல்மாவும்,
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 1019-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 958 ௵ தை மீ 29 உ புதன் கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2475-00ம் இதில் ரூபா 2000-க்கு 7-6-56 திகதி தொடக்கம் 31-7-56 வரைக்கும் வருடமொன்றுக்கு 100-க்கு 12 வீத வட்டியும் அதன்மேல் முழுத் தொகைக்கும் 31-7-56 தொடக்கம் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 190-05 இதில் கோட்டுச் செலவில் ரூபா 100/-ம் தீர்வைத் தொகையில் ரூபா 200/- கொடுபட்டது.

### காணி விபரம்

1. வடமாகாணம்யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணாபண்ணைக்கோவிற்பற்று வண்ணர்பண்ணை மேற்கிறை ஆயிலடி நிலப்பரப்பு இரண்டு (2)-ம் வீடும் எல்லை கிழக்கு எஸ். மொகமெட் பெண் சேயாம்பு நாச்சியா வடக்கு எஸ் மாதர் பெண் நாச்சியா மேற்கு வி: மொகமெட் பெண் சுலையம்மாவினுதனம் தெற்கு ரூேட்டு. இதடங்கலிற் சொரியலாய் (1/3)மூன்றில் ஒன்று.

2. ஷை இறை ஆயிலடி நிலபரப்பு அரை (½) வீடும் கிணறும் எல்லை கிழக்கு சேகு மொகமெட் பெண் சேயாம்பு நாச்சியாவும் மொகடீன் சாகிப் பெண் பாதும்மா நாச்சியாவும், வடக்கு சேகு அபூபக்கர் கோத் மொகடீனின் ஆதனம். மேற்கு சுல்ருன் அப்டுல்காதர் கைம்பெண் பதும் மாநாச்சியா, தெற்கு ரூேட்டு இதடங்கலும்.

ஆ. ச. கந்தையா
கொம்மிஷனர்

காரைநகர்
8-12-57.
M 19‹ 27-12-57

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M B 885
ஏரும்பு பாலசுப்பிரமணியம் கொக்குவில் கிழக்கு
வழக்காளி.
எதிராக
1 சுவாமிநாதர் செல்லையா மானிப்பாய் இப்போ இருக்கும் இடம் மாத்தலை.
2 பூவனேஸ்வரி தியாகராசா விக்ரோறியா ரூேட். மாத்தலை.
3 தம்பிராசா தியாகராசா, கொவாடென் பெற்ராலே, மாத்தலை. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 885ம் இல்க்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1958ம் ௵ தை மீ 26ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில்விற்கப்படும். முதலும் வட்டியும்ரூபா2580/-முதல்ரூபா 1500/-க்கும் தீர்வைத் திகதி 16-3-1956 தொடக்கம் 23-5-57 மட்டும் 9% வட்டியும் கோட்டுச் செலவு 166-75.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 2580/-ம் இதற்குத் தீர்வைத் திகதி தொடக்கம் 100-க்கு 5 வீத வட்டியையும் இறுக்க வேண்டும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு டிவிசன் கோவிற்பற்று மானிப்பாய் "சீமான் தோட்டம்" "மாவடி தோட்டம்" என்னும் காணி 16 பரப்பும் 7½ குழியும் கிணறும் கிணற்றுப் பங்கும் செய்பயிர் வகைகளும் உண்டு, எல்லை கிழக்கு செல்லப்பா கதிரவேலுவின் ஆதனமும். எல்லை வடக்கு J. P. நாகலிங்கமும் பங்காளரின் ஆதனமும். எல்லை மேற்கு செல்லப்பா கதிரவேலுவும், தய்யல் முத்துவும் சிவகாமிப்பிள்ளையின் ஆதனமும் எல்லை தெற்கு ஒழுங்கையும், செல்லப்பா கதிரவேலுவின் ஆதனமும். இது E 266/54 நம்பரில் பதியப்பட்டிருக்கிறது.

இ. கனகரேத்தினம்
Commissioner of Sales
R. Kanagaratnam
No. 35 Colombogam Rd,
Chundikuli
Jaffna, 20-12-57.
M 191 27-12-57,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் பொன்னம்பலம் செல்லப்பா வழக்காளி
வழக்கு இல M B 1464,
எதிராக
மல்லாகம்
1 இராமன் மார்க்கண்டன்
2 பொன்னம்மா மார்க்கண்டனின் மனைவி எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 1464ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1958ம் ௵ தை மீ 25ம் திகதி (25 1-58) சனிக்கிழமை மாலை 1-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- ரூபா 805-ம். 30-1-57 தொடக்கம் 15-5-57வரைக்கும் ரூபா 500 க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்ருக இறுப்டும்வரைக்கும் 15-5-57 தொடக்கம் 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 201-60 சதமும் இதில் ரூபா 250/- கட்டப்பட்டுள்ளது.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி, மல்லாகம் கோயிற்பற்று மல்லாகம் இறை "களுந்தை வாய்க்கால், களுந்தைத் திடலும், களுந்தைப்புலமும்" (Kalunthai Vaikkal Kalunthai Thidal, Kalunthaipulam) நிலப்பரப்பு 3-ம் குழி 15¼-ம் வீடும், செய்பயிர் வான்பயிர்களும், மேற்கிலுள்ள கிணற்றில் பங்கும் தூர்வை உரிமையும், வழமையான வழி, வாய்க்கால் உரிமையும். எல்லை கிழக்கு ரூேட்டும் கை யொழுங்கையும். வடக்கு தொம்மை யோவானின் ஆதனம். மேற்கு முருகேசு ஆறுமுகத்தினுடைய ஆதனமும் கிணறும் வழி வாய்க்காலும். தெற்கு வழிவாய்க்காலும் ரூேட்டும் இதடங்கலும். இது முழுதும் யாழ்ப்பாணம் காணிப் பதிவுக் காரியாலயத்தில் H 258/200-ப் இலக்கத்தின்கீழ்ப் பதியப்பட்டுள்ளது.

செ. பாண்டித்துரை
கொம்மிஷனர்.
(Commissioner of Sales)
மல்லாகம்,
14-12-57.
M 195 27-12-

## அணிந்துரை அரங்கம்

**மொழிப் பயிற்சி**

ஆரும் புத்தகம்

ஆசிரியர்கள்: பண்டித வ நடராஜன், திரு. சு. வேலுப்பிள்ளை வெளியீட்டோர்வட-இலங்கைத்தமிழ் நூற்பதிப்பகம், சுன்னுகம்.

விலை ரூபா 1-75.

இப்புத்தகம் ஏழாம் எட்டாம் வகுப்புக்களுக்குப் பயன்படுமாறு ஆசிரியர்களால் எழுதப்பட்டுள்ளது. இது மூன்று பாகங்களைக் கொண்டுள்ளது. முதற் பகுதி இலக்கண விஷயம். இரண்டாம் பகுதி கட்டுரை விளக்கம்; மூன்ரும் பகுதி பயிற்சிகள். இரண்டாம் மூன்ரும் பகுதிகள் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. முதலாம் பகுதியிலுள்ள இலக்கண விஷயங்கள் ஏழாம் வகுப்பு மாணவருக்கேற்ற பயிற்சிகளைக் கொண்டிருந்தால் அதிகம் பயனைத் தரும். ஆசிரியர்கள் தம்முகவுரையில் "இந்நூலின் முதற்பகுதி இலங்கைப் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு மாணவர்கள் தமிழிலே தேர்ச்சியடைவதையுங் கருத்துட் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார்கள். இந்நூலில்உள்ள அச்சுப் பிழைகளைத் தொகுத்து அச்சிட்டு இணைத்திருப்பின் நலமாகும்.

—0—


**சிவ நெறிப் பாராயணத் திரட்டு**

இது தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா முதலிய சைவத்திருமுறைகளிலிருந்தெடுத்துத் தொகுக்கப்பெற்று, "யாழ்ப்பாணத்து மேலைப்புலோலியூர் மகாவித்துவான் நா. கதிரைவேற்பிள்ளையவர்களின் நினைவு நிலையமாக நிறுவப்பட்டுள்ள கதிரைவேற்பிள்ளை கலாமன்றம், அன்னரின் விரிவான சரிதமெழுதவும் நூல்களை வெளியிடவும் இன்னும் பல ஆக்க வேலைகள் செய்யவும் முயற்சி எடுத்து வருகின்றது. அதற்கறிகுறியாக முதலில் இது வெளிவருகின்றது" என்றபடி சைவப் புலவர் திரு. சி அருளம்பலம் அவர்களால் அச்சிட்டுவெளியிடப் பெற்றது.

"இதனுற் கிடைக்குமூதியம் கதிரைவேற்பிள்ளை கலாமன்ற ஆக்கவேலைசட்கு உதவப்பெறும்". ஆகவே சைவ அன்பர்கள் இவ் வெளியீட்டை வரவேற்துக் குறித்த கலாமன்றத்தாரின் ஆக்க வேலைகளுக்கு ஊக்கமளிப்பார்களென்று நம்புகின்ரேம்.

விலை குறிக்கப்படவில்லை.

பெறுமிடம்:
'கதிரைவேற்பிள்ளை கலாமன்றம்'
மேலைப்புலோலி
பருத்தித்துறை,


**ஜீ. ஸீ. ஈ. இலக்கியம்**

திருவிளையாடற்புராண வசனச்சுருக்கம்

அருஞ்பதவுரை, செய்யுள்உரை முதலியவற்றுடன்.

விலை சதம்: 50.

மனேஜர், 'இந்துசாதனம்' யாழ்ப்பாணம்.

கோட்டை அடையாள இரட்டைப் பீலி

**வீட்டு ஓடுகள்**

**திறமானதிலும் திறமானது**

உறுதிக்கும் நம்பிக்கைக்கும் ஒப்பில்லாதது பெருமழையில் மிகச்சிறிய அளவுநீரை உறிஞ்சுகின்றது. மழை காலத்தில் தண்ணீர் சிறிதாயினும் ஒழுகமாட்டாத வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதை உபயோகிக்கும் பெருந்தொகையினரின் அபிப்பிராயத்தைக் கேட்டறிக,

நீண்டகால உபயோகத்தில்
திறமானபொருளே மலிவானதாகும்

**வில்லியம் மேதர் சன்ஸ்**
**சோல் ஏஜன்ஸ் யாழ்ப்பாணம்**


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும்திரு சுப்பையா பொன்னம்பலம் கந்தையாஅவர்களால்27-12-57 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org